செ.வெ.எண்.: 59 நாள்: 30.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் வக்∴ப் வாரியத்தில் பதிவுபெற்றவக்∴ப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கரவாகனம் வாங்கமானியம் - மாவட்டஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

மாண்புமிகுதமிழகமுதல்வர் அவர்களால் தமிழ்நாடுசட்டமன்றபேரவையில் விதிஎண் 110-ன் கீழ் தமிழ்நாடுவக்∴ப் வாரியத்தில் பதிவுசெய்யப்பட்டவக்∴ப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்குபுதிய இருசக்கரவாகனங்கள் வாங்கரூ.25,000/- அல்லதுவாகனத்தின் விலையில் 50 சதவீதம் இதில் எதுகுறைவோஅத்தொகைமானியமாகவழங்கிஅறிவிக்கப்பட்டுள்ளது.

வக்∴ப் நிறுவனத்தில் பணியாற்றும் உலமாக்கள் இத்திட்டத்தின் கீழ் பணிநிமித்தமாகதாங்கள் பணியாற்றும் இடங்களுக்குஅல்லதுவேறு இடங்களுக்குதினசரிநீண்டதூரம் பயணிக்க இரு சக்கரவாகனம் புதியதொழில்நுட்பத்துடன் கூடியGearless / Autogearகூடியஎஞ்சின் 125CC சக்திக்குமிகாமல் இருக்கவேண்டும். அரசின் மானியவிலைக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் பட்சத்தில் இத்தொகையினைபயனாளியேசெலுத்தல்வேண்டும். வாகனம் 01.01.2020க்கு பிறகுதயார் செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

<u>தகுதிகள் :-</u>

1. வயது 18 லிருந்து 40 வயதுஉட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகுதி 8ஆம் வகுப்பு (தேர்ச்சி/ தோல்வி).
3. தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
4. பதிவுசெய்யப்பட்டவக்∴ப் நிறுவனங்களில் பணியாற்றும் மனுதாரர் விண்ணப்பிக்கும் நாளில் அவர் 5 வருடம் குறைந்தபட்மாகபணியாற்றிருக்கவேண்டும்.
5. விண்ணப்பிக்கும் போதுவிண்ணப்பதாரர் சான்றிதழ் LLRபெற்றிருத்தல் வேண்டும்.
6. வக்∴ப் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் 1. பேஷ் இமாம், 2. அரபிஆசிரியர்கள், 3. மோதினார். 4. முஜாவர் என்றமுன்னுரிமையில் ஒன்றுஅல்லதுமேற்பட்டநபர்கள் விண்ணப்பம் செய்தல் முன்னுரிமைஅடிப்படையில் ஒருவருக்குமட்டும் மானியத் தொகைவழங்கப்படும்.

<u>நிபந்தனை :-</u>

இரு சக்கரவாகனம் பெறும் பயனாளிவாகனத்தைகுறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வரைநாகப்பட்டினம் மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலரின் அனுமதியின்றிவேறொருநபருக்குமாற்றவோஉரிமைகிடையாது.

<u>இணைக்கப்படவேண்டியஆவணங்கள் :-</u>

1. ஆதார் அட்டை
2. வாக்காளர் அடையாளஅட்டை/ குடும்பஅட்டை(Smart Ration Card).
3. வயதுசான்றிதழ்
4. வருமானசான்றிதழ்
5. புகைப்படம்
6. மாற்றுத்திறனாளியாக இருப்பின் உரியஅலுவலரிடம் பெற்றசான்று.
7. ஓட்டுநர் உரிமம் / LLR (Learner Licence Registration)

8. கல்விதகுதிச் சான்றிதழ் (குறைந்தபட்சம் 8-வது தேர்ச்சி/தோல்வி)
9. வங்கிகணக்குபுத்தகத்தின் முதல் பக்கநகல் (கணக்குஎண் /IFSC குறியீட்டுடன்)
10. தொடர்புடையமுத்தவல்லியிடம் எத்தனைஆண்டுகள் வக்.்.ப் பணிபுரிகிறார் என்பதற்கானசான்றுபெற்றுமாவட்டவக்.்.ப கண்காணிப்பாளர் மேலொப்பத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.
11. வாகனத்திற்கானவிலைப்பட்டியல் / விலைப்புள்ளி.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெறஉரியவிண்ணப்திதனைநாகப்பட்டினம் மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலகம் (அறைஎண் 222) மாவட்டஆட்சியரகம் நாகப்பட்டினத்தில் வேலைநாட்களில் (திங்கள் முதல் வெள்ளி) காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இலவசமாகபெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களைமுழுமையாகபூர்த்திசெய்துஉரிய இணைப்புகளுடன் விண்ணப்பத்தினைபெற்றுக்கொண்டநாகப்பட்டினம் மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலகத்தில் அறைஎண்:- 222 (இரண்டாம் தளம்) 24.07.2021மாலை 05.00 மணிக்குள் ஒப்படைக்கவேண்டும். பெறப்பட்டவிண்ணப்பங்கள் தகுதிஅடிப்படையில் பிரிக்கப்பட்டு கூர்ந்தாய்வுசெய்யப்பட்டுமாவட்டதேர்வுக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டஅடிப்படையில் தேர்வுசெய்துவாகனம் கொள்முதல் செய்துகொள்வதற்கானஉத்தரவுவழங்கப்படும் . உரியதகுதிகள் கொண்டோர் குறிப்பிட்டகாலத்திற்குள் விண்ணப்பித்துபயனடைந்திடவேண்டிநாகப்பட்டினம் மாவட்டஆட்சியர் மருத்துவர். அ.அருண் தம்புராஜ், இ.ஆ.பஅவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**